★ இந்தியாவின் அரசியல் நகல் வெளியாயிற்று ★

Regd. No. 4739

விலை அணா ஒன்று

திராவிடநாடு திராவிடருக்கே!

விடுதலை

(திராவிடர் தமிழ்த் தினசரி)

மலர் 9] சென்னை (26-2-'48) வியாழன் ★ வெளியூர் (27-2-'48) வெள்ளி [இதழ் 235

ஸ்டேட்களின் யூனியனாக, விளங்கும் இந்தியா

நிர்வாக அதிகாரமனைத்தும் தலைவர் கையில் தரப்படுகிறது

மொழிவாரி மாகாணப்பிரிவினைகளுக்கு ஆக்கமும் ஆதரவும்

மாகாண, மத்திய சர்க்கார்களின் அதிகாரங்கள்பற்றி விளக்கம்

கவர்னர்கள் நியமனம் சம்பந்தமாக இருவகைத் திட்டங்கள்

புதுடெல்லி, பெப். 25—

இந்திய அரசியலமைப்பு சபை சார்பாகத் தயாரிக்கப்பெற்ற இந்தியாவின் எதிர்கால அரசியலுடைய நகல் இன்று வெளியிடப்பட்டது. இந்நகல் பதினெட்டுப் பாகங்களாகப் பிரிக்கப்பெற்று, முந்நூற்றுப் பதினைந்து விதிகளும் எட்டு சேர்க்கைகளும் (ஷெட்யூல்கள்) அடங்கப்பெற்றிருக்கிறது. டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் (தலைவர்) தோழர்கள் என். கோபாலசாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், கே. எம். முன்ஷி, என். மாதவராவ், டி. பி. கைத்தான், சையிது மகமது சாதல்லா ஆகியோர் அரசியல் நகல் தயாரிப்புக் கமிட்டியின் உறுப்பினர்களாவர்.

இவ்வரசியல் நகலைத் தயாரிப்பதில் கமிட்டி, அரசியலமைப்பு சபை செய்த முடிவுகளைப் பின்பற்றவே பெரிதும் முயன்றிருக்கிறதென தனது அறிக்கையை சபைத் தலைவருக்கு முன் வைக்குமுகத்தான் கமிட்டித் தலைவர் விளக்குகிறார். எனினும் சில விஷயங்களைப் பொறுத்து சிற்சில மாறுதல்களை செய்யவேண்டியது அவசியமென்றும் கமிட்டி கருதிற்று.

அரசியல் நகலின் பீடிகை, கடந்த ஜனவரியில் அரசியலமைப்பு சபை நிறைவேற்றிய இலட்சியத் தீர்மானத்தின் அடிச்சுவட்டின் வழியேதான் செல்கிறது. அரசியலமைப்பு சபை கண்ட முடிவை யனுசரித்தே இப்பீடிகை அமைந்துள்ளது. (இந்தியக்) குடியரசுக்கும் பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளுக்கு மிடையேயிருக்க வேண்டிய உறவு முறை பற்றிய பிரச்னையைப் பின்னர் முடிவு செய்துகொள்ளலாமென அப்படியே விட்டுவைக்கப்பட்டிருக்கிறது.

அரசியலின் அம்சங்கள்

1. யூனியன், அதன் பிரதேசம், அதன் வியாபகம் ஆகியவற்றைப் பற்றி அரசியலின் முதற்பாகம் பேசுகிறது. இந்தியா ஒரு (ஸ்டேட்ஸ்களின்) யூனியனாக இருக்குமெனவும் கூறுகிறது

2. அரசியலின் இரண்டாவது பாகம் பிரஜா உரிமை (குடி மக்கள் உரிமை)யைப் பற்றிப் பேசுகிறது.

3. அடிப்படை உரிமைகள் பற்றி மூன்றாவது பாகத்தில் பேசப்படுகிறது

5. நிர்வாக முறைபற்றி ஐந்தாவது பாகம் கூறுகிறது.

6. அரசியலின் ஆறாவது பாகத்தில் ஸ்டேட்கள்—இன்றைய மாகாணங்கள்— பற்றிப் பேசப்படுகிறது.

7 டெல்லி, ஆஜ்மீர்— மேர்வாரா, குடகு முதலிய இன்றைய கமிஷன்கள் மாகாணங்களையொத்த ஸ்டேட்களைப்பற்றி ஏழாவது பாகத்தில் கூறப்படுகிறது.

8. இந்தியப் பிரதேசத்தினுள்ளடங்கிய, ஆனால் அதன் ஸ்டேட்களாயிராத பிரதேசங்கள்—அதாவது அந்தமான், நிக்கோபர் தீவுகள் போன்றவை—நிர்வாகம்பற்றி எட்டாவது பாகம் பேசுகிறது.

9 அரசியலின் ஒன்பதாவது பாகம் யூனியனுக்கும் ஸ்டேட்களுக்குமிடையே யிருக்கக்கூடிய சட்டமுறை, நிர்வாகமுறை உறவுகள்பற்றி விளக்குகிறது.

10. பத்தாவது பாகத்தில் நிதி, சொத்து, கான்ட்ராக்ட்கள், சூட்கள் ஆகியவை பற்றிப் பேசப்படுகிறது

11 அவசரகால அதிகாரங்கள் பற்றிப் பதினோராவது பாகம் பேசுகிறது.

12. அரசியலின் பன்னிரண்டாவது பாகத்தில் சர்விஸ் பற்றிக் கூறப்படுகிறது.

13. தேர்தல்களைப் பற்றிப் பதின்மூன்றாவது பாகத்தில் விளக்கப்படுகிறது.

14. சிறுபான்மையோர்க்கு (மைனாரிட்டிகளுக்கு)ப் பாதுகாப்பு பற்றி அரசியலின் பதினான்காவது பாகம் கூறுகிறது.

16. அரசியலின் பதினைந்தாவது பாகம் சில்லரை நிபந்தனைகள் பற்றிப் பேசுகிறது

16 அரசியலைத் திருத்தியமைப்பதற்கான நிபந்தனைகள் பதினாறாவது பாகத்தில் கண்டுள்ளன.

17. தற்காலிக, மாறுதலுக்குரிய நிபந்தனைகள்பற்றி பதினேழாவது பாகம் கூறுகிறது

18. இப்புதிய அரசியல் அமுலுக்குவரும் தேதி பற்றிப் பதினெட்டாவது பாகம் கூறுகிறது.

யூனியனும் அதன் பிரதேசமும்

இந்தியப்பிரதேசமென்பது அந்தமான் நிக்கோபார் தீப கற்பங்களும் அடங்கப்பெற்றதாகும்; காலப் போக்கில் நாடு கைப் பற்றும் இதர பிரதேசமும் இதில் அடங்கும். புதிய ஸ்டேட்களைச் சேர்த்துக் கொள்ளவும், அமைக்கவும், நிறுவவும் நிபந்தனை கண்டுள்ளது.

மொழிவாரி மாகாணப் பிரச்னை பற்றி நகல் கமிட்டி பேசுகையில் இது விஷயமாக அண்மையில் சர்க்கார் அறிக்கையொன்று வெளி வந்ததென்றும், 1935வது வருஷத்திய இந்திய சர்க்கார் ஆக்டின்கீழ் ஒரிஸா, சிந்து விஷயத்தில் செய்யப்பட்டதுபோல, ஆந்திராவையும் இவ்வரசியலின் கீழ் மாகாணமாக ஆக்கிவிடலாமென்றும் சர்க்கார் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரிவித்து மேலுங் கூறுவதாவது:

ஆந்திராவை ஒரு தனி ஸ்டேட்டாகவே ஷெட்யூலில் குறிப்பிட்டுவிடலாமாவென நகல் கமிட்டி முதலில் எண்ணிற்று ஷெட்யூலில் குறிப்பிட்டு விடுதல் மட்டும் போதாதெனப் பின்னர் கமிட்டி கருதியதால் இப்புதிய அரசியல் முறை அமுலுக்கு வரும்போழுதே ஆந்திராவும் தனி ஸ்டேட்டாக தனி (மாகாண) சர்க்காருடன் திகழும் வகையில் பூர்வாங்க நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமென அபிப்பிராயப்படுகிறது

ஆந்திராவுக்கு மட்டுமன்றி இதர மொழிவாரிப் பகுதிகளுக்கும் பொருத்தமான எல்லா விஷயங்கள் பற்றியும் விசாரித்து முடிவு கட்ட கமிஷனொன்றை நியமிக்க வேண்டுமென கமிட்டி சிபார்சு செய்கிறது.

இந்திய யூனியன்

இந்தியா ஸ்டேட்கள் பலவற்றின் யூனியனாகத் திகழும், 'பெடரேஷன்' என்பதற்குப் பதிலாகத்தான் 'யூனியன்' என்று குறித்துள்ளது கமிட்டி. இந்தியாவின் அரசியல் முறையானது அமைப்பில் கூட்டமாகத்தான் (பெடரல் முறையில் தான்) இருக்குமென்ற போதிலும் இந்தியாவை 'யூனியன்'' என்று அழைப்பதில் சில நன்மைகள் இருப்பதாக கமிட்டி கருதுகிறது.

நிர்வாக முறை

(இந்திய) ஸ்டேட்டுக்குத் தலைமையாக இருப்பவரே இந்தியாவின் தலைவராக இருப்பார். யூனியனின் நிர்வாக அதிகாரம் முழுமையும் தலைவரிடமே இருக்கும். பொறுப்புள்ள மந்திரிகளைக் கொண்டு அவர் நிர்வாகம் செலுத்தி வருவார். கீழ், மேல் பார்லிமெண்ட் சபைகளினுடைய உறுப்பினர்களும் ஸ்டேட்களுடைய சட்டசபைகளின் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களும் தலைவரைத் தேர்ந்தெடுப்பர். தலைவர் ஐந்தாண்டு காலம் பதவி வகிப்பார்; ஒரே ஒரு தடவை மட்டும் புனர் தேர்தலுக்குரியவராவர். தலைவர்தேர்தலுக்கு நிற்பவர் 35 வயதுக்குக் குறையாதவராக இருக்க வேண்டும்; கீழ் பார்லிமெண்ட் சபையில் உறுப்பினராக இருக்க வேண்டும். அரசியலை மீறும் எந்தச் செயலுக்கும் தலைவர் மீது குற்றஞ்சாட்டலாம். துணைத் தலைவரொருவருக்கும் அரசியலில் நிபந்தனை காணப்படுகிறது. பார்லிமெண்டின் இரு சபை உறுப்பினா

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

சென்னை சர்க்கார் வரவுசெலவுத் திட்டம்

வரவை விட செலவு $5\frac{1}{2}$ கோடி அதிகம்!

—:o:—

ரெவினியு ரிசர்வ் நிதியிலிருந்து ஈடு செய்யப்பட்டது

சீரமைப்புத் திட்டம் சுத்த பூஜ்யம்!

கையிருப்பு நிதி கரைகிறது!

உப்புசப்பில்லாத பட்ஜெட்

புதன்கிழமை சென்னை சட்டசபையில் நிதி மந்திரி தோழர் பி. கோபால ரெட்டி மாகாண சர்க்காரின் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்தார்.

தேசியப் பாதுகாப்பு படை, ஆயுதந் தாங்கிய போலீஸ் படை ஆகியவைகளை சென்னை சர்க்கார் நிர்மாணிக்க முடிவு செய்ததன் விளைவாக போலீஸ் இலாகாவின் செலவு 175 லட்ச ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

வரும் ஆண்டில், வருமானத்தை விட செலவு 5·61 கோடி ரூபாய் அதிகம் ஆகும் மாகாணத்தின் தொழிலபிவிருத்தி பற்றி நிதி மந்திரி கூறுகையில் சேலம், திருச்சி, கர்நூல் மாவட்டங்களில் கிடைக்கும் இரும்பைக் கொண்டு ஆவன செய்ய மத்திய சர்க்காரின் அனுமதியையும், யோசனையையும் பெற முயற்சித்து வருவதாகக் கூறினார்.

மது விலக்குத் திட்டத்தால் இந்த நடை முறை ஆண்டில் 384 லட்ச ரூபாய் வருமானக் குறைவு ஏற்பட்டதாகவும் வரும் அக்டோபரில் பூரண மது விலக்கு அமுலுக்கு வந்ததும் வருமானத்தில் 17 கோடி மொத்தமாகக் குறைவு ஏற்படுமென்றும் தோழர் கோபால ரெட்டி கூறினார்.

ரெவின்யூ ரிசர்வ் நிதியிலிருந்து 5·62 கோடி ரூபாயை எடுத்துக் கொண்டு 1948—49 வரவு செலவைச் சரி செய்ததால் ரூ. 71000 உபரியாகிறது.

சென்னை, பிப். 25—

இன்று காலை சென்னை சட்டசபையில நிதி மந்திரி 1948-49-ம் ஆண்டின் மாகாண வரவு செலவுத் திட்டத்தைச் சமர்பித்துப் பேசினார். இந்தியா டொமினியன் அந்தஸ்து பெற்றதன் பின் இது தான் சென்னை சர்க்காரும், நிதி மந்திரியார் கோபால ரெட்டியும் கொண்டுவரும் புதி, முதல் வரவு செலவுத் திட்டமாகும.

இன்று சட்ட சபையில் நிறைய கூட்டம் இருந்தது. நிதி மந்திரி தனது முதல் வரவு செலவுத் திட்டத்தைப் பிரரேபித்துப் பேசுகையில் காந்தியார் மறைவு குறித்து ஆரம்பத்தில் சில வார்த்தைகள் கூறினார்.

சென்னை கவர்னரும் இன்றைய நடவடிக்கைகளின் போது வந்திருந்தார்.

1947மார்ச்சுக்குப்பின் நாட்டில் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றித் தோழர் கோபால ரெட்டி குறிப்பிட்டுவிட்டு ஆகஸ்டு 15-ல் அதிகார மாற்றமேற்பட்டதன் விளைவாக மாகாண நிர்வாக முறைகளிலும மாறுதல்கள் விளைந்ததாகவும் தற்போதும் மாகாண கவர்னரே சர்க்காருக்கு தலைவரென்றலும முன்னைப் போல அவருக்கு விசேஷ அதிகாரங்கள் இல்லையென்றும், மாகாண கவர்னர் அவரது பரிவாரங்கள் மந்திரிகள் அட்வகேட் ஜனரல், ஜட்ஜுகளுக்கு பென்ஷன் பப்ளிக் சர்விஸ கமிஷன், ஹைகோர்ட் நிர்வாகம் ஆகிய நிர்வாகங்களுக்கு வருமானத்திலிருந்தே செலவு செய்யப்படுவதாகவும மாகாண சர்க்கார் செய்யும் சட்டங்கள், மத்தியஸ்த கோர்ட்டுகள், போதுமான வருமானமில்லாத ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கடன் கொடுத்தல் ஆகியவைகளுக்குள்ள செலவு 7 சத விகிதத்திலிருந்து 5 சத விகிதமாக குறைந்திருப்பதாகவும் நிதி மந்திரியார் கூறினார்.

பங்கன பள்ளி பற்றி......

சென்னை மாகாணத்துடன் 44,647 பேர் மக்கள் நிறைந்ததும் 275-சதுர மைல் பரப்புள்ளதுமான பங்கனபள்ளி சேர்ந்துவிட்டது. இதனால் ஏற்படும் நிதி விவகார நிலைமை காலா காலத்தில் செய்யப்படும் என்று நிதி மந்திரி வெளியிட்டார்.

மாகாண உணவு நிலை

"நடைமுறை ஆண்டான 1947-48 பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தின் போது மாகாண உணவு நிலை சீர்படுமென்றும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் அளவில் குறைவு ஏற்படுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக 1947-ல் பருவநிலைமையின் கோளாறு நீங்காமற் போகவே தென்பாகத்திலும் மத்திய மாவட்டங்களிலும் அரிசி விளைச்சல் குறைந்ததன் பலனாக மாகாண உணவு நிலைநெருக்கடியாகிவிட்டது. தற்போது மாகாண சர்க்காருக்கு மத்திய சர்க்கார் 20,000 டன் உணவு தானியங்களை ஒதுக்கியிருந்தும் இப்போது தேவை 400,000 டன்களுக்கு உயர்ந்துவிட்டது. இதுகூட போதாது போலிருப்பதால் நாங்கள் மத்திய சர்க்காரை ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்."

(தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க)

மராத்தி பத்திரிகாசிரியர் கைது

பம்பாய், பிப். 25—

'விவித வ்ரித்தா' என்ற மராத்திய வாரப்பத்திரிகை யாசிரியரான தோழர் ஆர். கே. டாட்னிஸ், இன்றுகாலை அவரது இல்லத்தில், பொது ஜன பாதுகாப்புச் சட்டத்தின்படி, கைது செய்யப்பட்டார்.

அவருடைய பத்திரிகாலயமும், போலீசாரால் சோதனை யிடப்பட்டது. —அ. பி.

செக்கோஸ்லோவேக்யா குழப்பம் முடிவுற்றது

24 பேரடங்கிய புது மந்திரி சபை

முக்கிய இடங்கள் கம்யூனிஸ்டுகள் வசம்

பிரேக், பிப். 25—

சகலகட்சியினருமடங்கிய 24பேர்களுள்ள புது செக்கோஸ்லோவேக்யா மந்திரிசபைநிறுவப்பட்டு விட்டதாக பிரேக் ரேடியோ இன்றிரவு அறிவித்தது.

கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்த எம். க்ளமெண்ட் கோட்வால்டு மீண்டும் பிரதமரானார். வெளிநாட்டு மந்திரியாக முன்பு இருந்ததுபோலவே காஸரிக் திரும்பி வந்துள்ளார்.

புது சர்க்காரில் ஒரு பாதிரியாரும், ஒரு பெண்மணியும் பதவி வகிக்கின்றனர்.

கம்யூனிஸ்டுகள் 12 பேர் பதவி வகிக்கின்றனர். முக்கிய பாகங்களான பிரதமர், உள்நாட்டிலாகா, நிதி, வியாபாரம் ஆகிய பொறுப்புகள் கம்யூனிஸ்டுகள் வசமேயுள்ளன.

நாட்டிற்கு நல்ல வழி காட்ட..,

:(✲✲):

ரமண ரிஷியையும், அரவிந்தரையும் அழைக்கிறார் சமதர்ம வீரர்!

(X)

இந்திய நெருக்கடியைத் தீர்க்க ஜயப்பிரகாஷின் 'அ ர ர' யோசனை!!

புதுடெல்லி, பிப். 24—

"ஆத்மீக வழியில் பாதை காட்டும் தலைவர்களான அரவிந்தர், ரமண மகரிஷி, டாக்டர் பகவன்தாஸ் ஆகிய அறிஞர்கள் ஒன்று கூடி இந்தியாவுக்கு இந்த நெருக்கடியான கட்டத்தில் வழிகாட்ட வேண்டும்" என்று இந்திய சமதர்மக் கட்சி (சோஷலிஸ்டு) யின் தலைவரான ஜயப்பிரகாஷ் நாராயண் வெளியிட்டார்.

காந்தியார் படுகொலையின் விளைவாக ஏற்பட்ட சூழ்நிலை குறித்து சமதர்மக் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவின் கூட்டம் இரண்டு நாட்கள் கூடியபோது நிறைவேற்றப்பட்ட முடிவுகளை இன்று பத்திரிகை நிருபர்களுக்கு விவரித்துக் கூறுகையில் ஜயப்பிரகாஷ் மேற்கூறியவாறு கூறினார். (அ.பி.)

இந்தியாவின் அரசியல் நகல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் அவரைத் தேர்ந்தெடுப்பர். அவர் ஐந்தாண்டு பதவி வகிப்பார். தலைவர் பதவி காலியாகுங்கால், துணைத் தலைவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். தலைவர், துணைத்தலைவர் தேர்தல் சம்பந்தமாக எழும் எல்லா சந்தேகங்களும், தகராறுகளும் சுப்ரீம், கோர்ட்டினால் தீர்த்து வைக்கப்படும் அத்தீர்ப்பே முடிவானதாகும்.

மந்திரிசபை

பிரதம மந்திரி யொருவர் தலைமையில் மந்திரிசபை யொன்று இருக்குமென்றும் அரசியல் நகல் கூறுகிறது. தலைவர் தனது அதிகாரங்களைச் செலுத்துவதில் இம்மந்திரிகளை ஆயுரையும், ஆதாரவும் அளித்துவரும். சட்டசபைக்குப் பொறுப்பு இம்மந்திரி சபையேயாகும்.

இப்பொழுதைய அரசியல் முறைப்படி இந்திய அட்வோகேட் ஜெனரல் ஒருவர் இருப்பதுபோல, இவ்வரசியலில் அட்டர்னி-ஜெனரல் ஒருவரை நியமிப்பதற்கு நிபந்தனை காணப்படுகிறது.

யூனியன் பார்லிமெண்ட்

யூனியன் பார்லிமெண்ட் என்பது ஒரு தலைவர், இரு சட்டசபைகள் அடங்கப் பெற்றதாகும் ஸ்டேட்கள் கவுன்சில் (கவுன்சில் ஆப் ஸ்டேட்ஸ்). மக்கள் சபை (அவுஸ் ஆப் தி பீடபிள்) என இவ்விரு சட்ட சபைகளும் பெயர்பெறும். ஸ்டேட்கள் கவுன்சிலில் 250 உறுப்பினர்கள் இருப்பர்; இலக்கியம், கலை, விஞ்ஞானம்முதலிய துறைகளுக்குப் பிரதிநிதித்துவம் செலுத்த அந்த 250 பேர்களுள் 15 உறுப்பினர்கள் வரை தலைவராலேயே நியமிக்கப்படுவார். இதர 235 உறுப்பினர்களும் ஸ்டேட்களின் பிரதிநிதிகளாக இருப்பர். மக்கள் சபையில் 500-க்கு மேற்படாத உறுப்பினர்கள் இருப்பர். வயது வந்தோர்க்கு வோட்டுரிமை என்ற முறையில் நடைபெறும் தேர்தல்களின் மூலம் ஸ்டேட்களின் பிரதிநிதிகளாக இவ்வுறுப்பினர்கள் இருப்பர். குறைந்தது 750,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி வீதமாவது இருத்தல் வேண்டும்.

ஸ்டேட்கள் கவுன்சில் எப்பொழுதுமே கலைவுறாது. கூடிய வரையில, ஒவ்வொரு இரண்டாண்டு முடிவிலும், உறுப்பினர்களில் மூன்றிலொரு பகுதியினர் விலகிக் கொள்வர்.

மக்கள் சபை தொடர்ந்து ஐந்தாண்டு கட்கு இருந்துவரும்; பிறகு கலைவுறும். அவசர நிமித்தம் மேலுமொரு ஆண்டுக்கு நீடித்துக்கொள்ள நிபந்தனை கண்டுள்ளது.

பார்லிமெண்ட் மொழி

யூனியன் பார்லிமெண்டில் விவகாரங்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் நடைபெறும். இவ்விருமொழிகளும் சரியாகப் பேசத் தெரியாத எந்த உறுப்பினரையும் அவரது தாய்மொழியில் பேச சபைக்குத் தலைமை வகிப்பவர் அனுமதிக்கலாம்.

தலைவரின் அதிகாரங்கள்

பார்லிமெண்டில் இருசபைகளும் கூடியிருக்கும் நேரங்கள் தவிர்த்த இதர எந்த நேரத்தினும் சட்டங்கள் செய்ய தலைவருக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. அத்தகைய சட்டங்களைத் தனது மந்திரிகளின் ஆய்வுரைகளின் பேரிலேயே செய்வார்.

பெடரல் நீதி மன்றம்

இந்தியா சுப்ரீம் கோர்ட் என்று ஒன்றிருக்கும். அதில் இந்தியப் பிரதம நீதிபதி யொருவரும், ஏழுநீதிபதிகளும் இருப்பர். சுப்ரீம் கோர்ட்டிலோ உயர் நீதிமன்றத்திலோ பதவி யேற்றிருந்த பின்னர் அடயரான எவருக்கும் இந்தியாவில் எந்தக்கோர்ட்டிலும் வக்கீல் தொழில் செய்வது தடை செய்யப்படுகிறது.

இந்திய ஆடிட்டர்—ஜெனரல்

1935 வருடத்திய இந்திய சர்க்கார் ஆக்டில் கண்டுள்ள நிபந்தனை யொத்த நிபந்தனைகளே இந்தியா ஆடிட்டர்—ஜனரல் நியமனத்துக்கும் காணப்பட்டுள்ளன.

ஸ்டேட்களின் அரசியல்

ஸ்டேட்கள் எனப்படுவது இப்பொழுதைய கவர்னர்கள்மாகாணங்களேயாகும் ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும் ஒரு கவர்னர் உண்டு. ஸ்டேட்டின் நிர்வாக அதிகாரம் அவரது கையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

கவர்னர்கள் தேர்ந்தெடுப்பு பற்றி, அரசியல் நகலில் இரு விதமான நிபந்தனைகள் காணப்படுகின்றன முதலாவது, அரசியலமைப்பு சபை செய்த முடிவையொத்ததாகும். அதாவது, ஸ்டேட்டின் மேல் சட்டசபைப் பொதுத்தேர்தலில் வோட்டளிக்க உரிமையுடையோரனைவராலும் நேரடியாகவும் தேர்ந்தெடுக்கப்படுவார் கவர்னர். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு கவர்னரும், சட்டசபைகளுக்குப் பொறுப்பான ஒரு பிரதம மந்திரியும் சேர்ந்திருப்பதால் தகராறு எதுவும் நேரிட்டு, நிர்வாகக் கோளாறு ஏற்பட வாய்ப்பிருக்கிறதென நகல் கமிட்டி உறுப்பினர்கள் கருதுகின்றனர். அவர்கள் கருத்தப்படி ஸ்டேட் சபையால் தேர்ந்தெடுக்கப்படும் நால்வரின் ஜாபிதாவொன்று யூனியனின் தலைவருக்கு அனுப்பப்படும். அவர் அந்த ஜாபிதாவிலிருந்து ஒருவரை நியமிப்பார்.

கவர்னர் ஐந்தாண்டு காலம் பதவி வகிப்பார். அரசியல் முறையை அவமதிக்கும் எந்த கவர்னர் மீதும் குற்றஞ் சுமத்தப்படும்.

ஸ்டேட் மந்திரி சபை

ஸ்டேட் ஒவ்வொன்றிலும் பிரதமர் ஒருவர் தலைமையில் ஒவ்வொரு மந்திரி சபைக்கும் நிபந்தனை காணப்பட்டிருக்கிறது மந்திரிகளின் ஆய்வுரைகளின் படியே கவர்னர் நடந்து வருவார். எனினும் அவருக்கென சில விசேஷ அதிகாரங்களும் தரப்பட்டுள்ளன. ஸ்டேட் சர்க்கார் நிர்வாக நடவடிக்கைகளனைத்தும் கவர்னர் பெயரிலேயே நடைபெறும்.

ஸ்டேட் அட்வோகேட்—ஜெனரல்

ஒவ்வொரு ஸ்டேட்டுக்கும் ஒரு அட்வோகேட்—ஜெனரல் உண்டு. 1935-வது ஆண்டு ஆக்டின்படி அதிகாரங்களே இவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளன ஸ்டேட் பிரதமர் விலகுங் காலத்தில் அட்வோகேட்—ஜெனரலும் விலகிவிடுவார்.

ஸ்டேட் சபைகள்

கவர்னர், கீழ், மேல் சட்டசபைகள் (சில ஸ்டேட்களில் ஒரு சட்டசபையே) ஸ்டேட் சட்ட சபையில் அடங்கும்.

கீழ் சட்டசபையில் குறைந்த பட்சம் 60, அதிக பட்சம் 300 உறுப்பினர்களிருப்பர். வயது வந்தோர்க்கு ஓட்டுரிமையென்ற அடிப்படையில் இவ்வுறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். சராசரி ஒரு லட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

கீழ் சட்டசபையில் இருக்கும் உறுப்பினர்களில் 25 சத விகிதத்திற்கு மேற்போகாத ஒரு எண்ணிக்கை படைத்ததோரே மேல் சட்டசபையில் இருப்பர். இவர்களுள் ஒரு பாதியினர் ஜாபிதாக்கள் மூலமும், மூன்றிலொரு பகுதியினர் கீழ் சட்டசபை உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவர். எஞ்சியோர் கவர்னரால் நியமிக்கப்படுவர். கீழ் சட்டசபை ஐந்தாண்டு காலம் நீடிக்கும். மேல் சட்டசபை கலைவுறாது. ஒவ்வொரு மூன்றாண்டாக்குப் பிறகும் மூன்றிலொரு பகுதி உறுப்பினர் விலகுவர்.

ஸ்டேட் உயர்நீதி மன்றங்கள்

1945-வருடத்திய இந்திய சர்க்கார் ஆக்டையெடுத்து பெரிதும் செய்யப்பட்டிருக்கிறது. எனினும், நீதிபதி யொருவர் 60 அல்லது 70 வயதுவரை தனது பதவியிலிருந்து வரலாமென இதில் நிபந்தனை காணப்படுகிறது. முதலில் நீதிபதியாக இருந்த பின்னர் வக்கீலாக வந்து தொழில் செய்வது தடை செய்யப்படுகிறது.

ஸ்டேட்களும் யூனியன் சர்க்காரும்

யூனியனுக்கும் ஸ்டேட்களுக்குமிடையே நிர்வாகத் தொடர்புகள் பற்றி நகல் கமிட்டி பேசுகையில், இப்பொழுதைய சமஸ்தானம் எந்தவொரு ஸ்டேட்டுமே யூனியனோடு அல்லது இப்பொழுதைய கவர்னர் மாகாணத்தைப் போன்ற ஸ்டேட்டோடு ஒப்பந்தமெதுவும் செய்து கொள்ள நிபந்தனை காணப்படுகிறது.

ஸ்டேட்களுக்குள் வர்த்தகம், வியாபாரம் சம்பந்தமாக, ஒருஸ்டேட் ஒருஸ்டேட்டை பாரபட்சமான முறையில், அலட்சியப்படுத்தி நடத்தி வருதல் தடைசெய்யப்படுகிறது. பொது நலத்தை உத்தேசித்து எந்த வொரு ஸ்டேட்டும் தடைகள் விதிக்கவும் அரசியல் நகலில் நிபந்தனை காணப்படுகிறது

ரெவின்யு விநியோகம்

யூனியனுக்கும், ஸ்டேட் ஆட்சிக்குமிடையே ரெவின்யு விநியோகம் பற்றிய நிபந்தனைகள் தற்காலிகமாக 1935-வது வருடத்திய ஆக்டையொத்தே செய்யப்பட்டுள்ளன.

அரசியல் முறை திருத்தம்

அரசியலில் திருத்தம் செய்ய வேண்டுமானால் யூனியன் பார்லிமெண்ட் சபைகள் ஒவ்வொன்றிலும் மூன்றிலிரு பகுதியினர் வோட்டளிக்க வேண்டும். ஒவ்வொரு சபையினுடையவும் முழு மெஜாரிட்டி வேண்டும். சட்ட ஜாபிதாக்களிலோ, பார்லிமெண்டில் ஸ்டேட்களின் பிரதிநிதித்துவம் பற்றியோ, சுப்ரீம் கோர்ட் அதிகாரம் பற்றியோ திருத்த மேதும் செய்ய முற்படின், அதற்கு இப்பொழுதைய கவர்னர் மாகாணங்களையொத்த ஸ்டேட்களின் சட்ட சபைகள் பாதியினுடையவும், இப்பொழுதைய சமஸ்தானங்களையொத்த ஸ்டேட்கள் மூன்றிலொரு பகுதியினுடையவும் சம்மதம் வேண்டும்.

"இந்திய நாட்டிற்கு உழையுங்கள்"

பிரதமர் நேரு வேண்டுகோள்

ஜலந்தர், பிப். 24—

"இந்நாட்டில் வாழும் எல்லா வகுப்பினர்களும், ஹிந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஜெயினர்கள், பௌத்தர்கள், யூதர்கள் ஆகிய யாவரும் இந்தியர்களே. அவர்கள் யாவரும், இந்நாட்டிற்காக பொதுவாக உழைக்கவேண்டுமென்றும் தனிப்பட்ட வகுப்பினரின் நலனுக்காகப் பாடுபடக் கூடாது. அது தான் நம்முடைய முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பிற்கும் வழியாகும்." என்று இந்தியப் பிரதமர், ஜலந்தரில் நடைபெற்ற ராணுவப்படையினர் கூட்டத்தில் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது: மக்கள் தாங்கள் ஒரு தனிப்பட்ட மாகாணத்தை, மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை மறந்துவிட வேண்டும், நம் நாடு என்ற முறையில் அதற்குப் பொதுவாக எப்படி சேவை செய்ய முடியும் என்பதுதான் நம் நோக்கமாகவிருக்க வேண்டும்."

பிறகு 2 லக்ஷம் மக்கள் கூடியிருந்த பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "கிழக்குப் பஞ்சாபிலுள்ள மக்கள், உணர்ச்சி வேகத்தில், பாகிஸ்தானைத் தாக்க வேண்டுமென்று கூறி வருகின்றனர். அம்மாதிரி பேசுவது சிறுபிள்ளைத்தனமாகும். சில பிரபலஸ்தர்கள், பாகிஸ்தானோடு போர் என்பது பற்றி பேசி வருகிறார்கள். அவர்கள், அத்தகைய பேச்சுக்களைப் பேசக்கூடாதென தடைவிதிக்கவேண்டியது சர்க்கார் கடமையாக ஆகிவிடும். ஒருவர் எவ்வளவு பெரியவராயிருந்தாலும், நாங்கள் அவர்களுக்கு பயப்படமாட்டோம். நாங்கள் லாகூரை வென்று, பாகிஸ்தானைத் தாக்கப் போவதாகக் கூறுவது சிறுபிள்ளைத் தனமாகும். அதே நேரத்தில் நாம் எவ்வித ஆக்ரமிப்பிற்கும் பயந்தவர்களல்ல என்றும் கூறுவேன். நம்மிடம் எத்தகைய அரிய போர்ப்படை இருக்கிறதென்பதை நீங்கள் இன்று காலையில் பார்த்தீர்கள். இவை இருப்பது எந்த நாட்டையும் தாக்குவதற்காக வல்ல, நம் நாட்டைக் காப்பதற்காக."

காந்தியார் நினைவாகப் பெயர்கள் தேவையா?

பிரதமர் நேரு எச்சரிக்கை

புதுடெல்லி, பிப். 25—

பிரதமர் நேரு இன்றிரவு விடுத்த அறிக்கை யொன்றில், தோழர் காந்தியாருக்குச் செய்யக்கூடிய மிகத்தகுதியான நினைவுச் சின்னம், அவருடைய அரிய போதனைகளைப் பின்பற்றுவதும், இந்நாட்டு முன்னேற்றத்திற்காக அவர் கொண்டிருந்தவேலைத்திட்டத்தை மென்மேலும் நடை முறையில் கொண்டு வருவதற்கான வேலைகளைச் செய்வதுமேயாகு மெனக் குறிப்பிட்டுள்ளார்.

தோழர் காந்தியாருக்குச் சிலைகள் செய்ய வேண்டுமென்று எண்ணியிருப்பவர்கள், தேசிய நினைவுச் சின்ன கமிட்டியின் தீர்க்காலோசனையான முடிவிற்காக காத்திருக்க வேண்டுமென்றும், அவசரப்பட்டு எவ்வித முடிவிற்கும் வரவேண்டாமென்றும் பண்டித நேரு கூறினார். மேலும், சாலைகள் நகரப் பகுதிகள், பொதுக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்குத் தோழர் காந்தியார் பெயரை வைக்க வேண்டுமென்ற மனப்பான்மையை வளரவிட்டால், நம்மில் பெரும்பாலானோர், காந்தி நகர், காந்தி கிராமம் காந்தி வீதியிலேயேவசிப்பவர்களாகி விடுவோம் என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

பிர்லா மாளிகை

புதுடெல்லி, பிப். 24—

தோழர் காந்தியார் தங்கிவந்த பிர்லா மாளிகையை எதிர்காலத்திற் சென்று காப்பாற்றி வைக்க, அம்மாளிகையைக் கைப்பற்ற வேண்டுமென்று பிரதமரைக் கோரும் வகையிலுள்ள விண்ணப்பமொன்றில் ஐம்பதுக்கு மேற்பட்ட அரசியல் அமைப்புசபை உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். நூறுபேர் கையெழுத்திட்டானதும், விண்ணப்பம் பிரதமர் கையில் கொடுக்கப்படும்.

சென்னை சர்க்கார் வரவு செலவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று குறிப்பிட்டோடு இதை சமாளிக்கும் நோக்குடன் விவசாயிகளுக்கு போனஸ், விலையேற்றம் ஆகியவைகளை மத்திய சர்க்காருடன் யோசனையுடன் செய்து வருவதாகவும், இந்திய சர்க்கார் கட்டளைக்கிணங்க உணவுக்கட்டுப்பாட்டையும் பங்கீட்டையும் ரத்து செய்ய ஆவன செய்து வருவதாகவும், கட்டுப்பாடு நீக்கத்தை படிப்படியாக அமுலுக்கு சர்க்கார் கொண்டுவரப்போவதால் கட்டுப்பாடு சம்பந்தமாகப் பணியாற்றிவரும் சர்க்கார் சிப்பந்திகள் தொகையும் குறையுமென்றும் 1947-48 ஆண்டில் சிவில் சப்ளை இலாகாவின் நிர்வாகத்துக்குள்ளடங்கிய கட்டுப்பாடு அதிகாரிகளுக்குமட்டும் 16-லட்ச ரூபாய் சர்க்கார் செலவழித்திருப்பதாகவும் கூறினர்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் இந்திய சர்க்காரின் கொள்கைக்கேற்ப மாகாண சர்க்கார் துணி, நூல் கட்டுப்பாடுகளை ரத்து செய்ததின் விளைவாக துணிக்கண்ட்ரோல் இலாகா சிப்பந்திகளின் தொகை குறிப்பிட்ட அளவில் குறைந்திருப்பதாகக் கூறினார்.

போர்ப் பிற்கால புனரமைப்பு

"1947-8 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் போர்ப் பிற்கால புனரமைப்புக்கென 12·81 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டது. இதில் மின்சார அபிவிருத்திக்கென 3·68 கோடியும் நீர்ப்பாசனத்துக்கென 1·70 கோடியும் திட்டமிட்டதும் உள்ளடங்கியதே திருத்திய பட்ஜட்படி இந்த ஆண்டில் போர்ப்பிற்கால புனரமைப்புக்கென 8·68 கோடிகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது

கஷால் வருமானத்தில் நடைமுறை ஆண்டில் கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது 414 லட்ச ரூபாய் நஷ்ட மேற்பட்டிருக்கிறது. இது மதுவிலக்கு அமுலுக்கு வந்ததன் விளைவாகும்.

கடந்த வரவு செலவுத்திட்டத்தின் போது ஆதித்திராவிட முன்னேற்றம் கிராமப் புனரமைப்பு ஆகியவைகள் பற்றிய சர்க்கார் திட்டங்கள் விலக்கப்பட்டன. கிராம புனரமைப்புக்காக ஒரு மாகாண பிர்க்கா அபிவிருத்தி போர்டு இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளது இது நியமிக்கும் உபகமிட்டி கிராம முன்னேற்ற வழிகளைக்காணும். இதன் முறைகளைச் சர்க்கார் கூர்ந்து பரிசீலனை செய்து வருகிறது. இதன்படி ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு பிர்க்கா மத்தியக் கமிட்டி நியமிக்கப்படும். ஒவ்வொரு பிர்க்காவுக்கும் தண்ணீர் வசதி, போக்குவரத்து பாதைகள் அமைத்தல் ஆகியவைகளுக்காக முறையே ரூபாய் 50, 000 சர்க்கார் தரும். சாதாரண அவசர வேலைகளுக்கென ஒவ்வொரு கலெக்டருக்கும் வழங்க ரூபாய் 10000மும் சர்க்கார் தரும்.

இதன்படி 27 பிர்க்காக்களையும் 7 மத்திய இடங்களையும் சர்க்கார் நிறுவும்.

வீடுகள் நிலை

மாகாணத்தில் குடியிருக்க வீடுகள் நெருக்கடி விரிவு படுத்துவதால் கூட்டுறவு முறைகளில் நகரப் பகுதிகளில் வீடுகள் நிர்மாணம் செய்ய ஆவன செய்யப்பட்டு வருகிறது.

நிலவரி பற்றி......

பருவநிலை காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்ட இடங்களில் வரிவசூலை ஒத்திவைப்பது அல்லது குறைப்பது என்பது பற்றி ரெவினியு போர்டின் சிபார்சுகளை சர்க்கார் கேட்டிருக்கிறது.

செலவு உயருகிறது!

வருமானத்திலிருந்து செலவழியும் தொகை பற்றிக்கவனிக்கையில் போலீஸ் நிர்வாகம் என்ற தலைப்பில் 175 லட்ச ரூபாய் செலவு உயர்ந்துள்ளது ஹோம் கார்டுகள் (தேசியப் பாதுகாப்புப்படை) ஆயுதந் தாங்கிய போலீசார் ஆகியவைகளை நிர்மாணிக்கும் ஏற்பாடுகளாலும் போலீஸ் கீழ்த்தர சிப்பந்திகளின் சம்பள மாறுதலாலும், மதுவிலக்குக்காக புது போலீஸ்கள் நியமனம் செய்யப்பட்டதாலும் செலவு இப்படி யேறியிருக்கிறது.

சென்னை நகர பஸ் போக்குவரத்திற்காக பஸ்கள் வாங்கியதால் வருமானம் தவிர்த்த மாகாண வேலைகளுக்குரிய கணக்கில் 70 லட்ச ரூபாய் ஏறி விட்டது. அத்துடன் நீர்ப்பாசனம் என்ற தலைப்பிலும் ரூபாய் 24 லட்சம் ஏறியுள்ளது.

1962-க்குள் செலுத்தி விடுவதாக 1947 நவம்பரில் மத்திய சர்க்காரிடமிருந்து 2 7/3 சதவிகிதம் ஆண்டு வட்டியுடன் 6 கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டது. இந்தத் தொகை மூலதன முடக்கத்தைச் சரி செய்யவும் விவசாயம் ஆகியவைகளுக்கு உதவவுமேயாகும். மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கும் பிற வழிகளிலும் கடன் கொடுக்கவேண்டியிருக்கும் தொகை 25 கோடியாகும்.

1948-9 வரவு செலவு

நான் இப்பொழுது 1948-9 ஆண்டின் வரவு செலவு பற்றிக் கூறுகிறேன்.

பருவக் கோளாறு விளைவாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வரிவசூலில் கடந்த ஆண்டின் 20 லட்சம் குறைக்கப்பட்டிருக்க இந்த ஆண்டிலும் ரூபாய் 50 லட்சம் குறைக்கப்பட்டு இந்த பட்ஜட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்கு விஸ்தரிப்பின் காரணமாக கடந்த பட்ஜட்டின் ஆறுமாத காலத்தில் சர்க்காருக்கு 384 லட்சம் நஷ்டமேற்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மேலும் அதிக நஷ்டம் ஏற்படவே செய்யும்.

பொது விற்பனை வரி

1948 ஜனவரியிலிருந்து பொது விற்பனை வரி விகிதம் உயர்த்தப்பட்டதன் விளைவாக 3-75 கோடி ரூபாய்கள் அதிக வருமானம் கிடைத்துள்ளது. இதனால் கிடைக்குமென கணக்கிடப்பட்டது 11-5-கோடி ரூபாயாகும். 1948 ஜனவரியிலிருந்து தமஷாவரியில் செய்யப்பட்ட மாறுதலாலும் ரூபாய் 30-லட்சம் அதிக வருமானம் கிடைத்துள்ளது.

சர்க்கார் சிப்பந்திகள் பஞ்சப்படி

சர்க்கார் சிப்பந்திகளின் பஞ்சப்படி உயர்த்தப்பட்டதால் அதற்கென 105·50 லட்ச ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன 1948-49 ஆண்டில் சர்க்கார் சிப்பந்திகள் பஞ்சப்படி கிராம புனரமைப்புகள், ஸ்தலஸ்தாபன ஊழியர்கள், சர்க்கார்உதவி பெறும் பள்ளிக்கூடங்கள்ஆகியவைகளுக்கென552லட்சரூபாய்கள் செலவழியுமென கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தப் புது பட்ஜட்டில்நான்கு புது ஆயுதந்தாங்கிய போலீஸ் படைகளுக்கு 61 லட்சமும், தேசியப் பாதுகாப்புப் படைகளுக்காக 61·80 லட்சமும் சேர்க்கப்பட்டிக்கிறது.

சிறிய நீர்ப்பாசன திட்டம்

சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கென 37 லட்ச ரூபாய்களும் கிராமங்களில் வீடு நிர்மாணம் நீதிநிர்வாக இலாகா பிரிவினை அமுல் ஆகியவைகளுக்காக முறையே ரூபாய் 100 வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கல்வி

அடிப்படைக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபாய் 11·5 லட்சங்களும் அளிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் இந்திமொழியைப் பயிற்றுவிப்பதற்காக 0·13 லட்சமும், பொது நூல்நிலையங்களுக்கு 2லட்சமும் தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்துக்கு 0 20 லட்சமும் செவிடு, குருடு, ஊமைக் குழந்தைகளுக்குக் கல்வியளிக்க 0 55 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது முதியோர் கல்வி அபிவிருத்திக்காக இரவு பள்ளிகள் முதலியவைகளுக்கென 1·55 லட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வைத்திய வசதிகளுக்காகவும் வெளியூர்களில் வைத்திய வசதிகள் கிடைக்கவும் மொத்தமாக ரூபாய் 35 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஸ்தல ஸ்தாபனங்கள் மக்களுக்கு ஆன வசதிகளைச் செய்வதற்காக மூன்று தவணைகளில் 74 லட்சம் வழங்குவதாகவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அகதிகளுக்கு......

அகதிகளுக்கென (பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள்) 20 லட்சம் செலவழியுமென மதிப்பிடப் பட்டிருக்கிறது.

ஹைதராபாத்திலிருந்து வரும் அகதிகளுக்கென சர்க்கார் ரூ 10,000 ஒதுக்கியுள்ளது.

பாகிஸ்தான் அகதிகளுக்கென செலவழியும் தொகை மத்திய சர்க்காரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

அணைக்கட்டுகள்

துங்கபத்திரா அணைக்கட்டுக்கென சர்க்கார் 2·9 கோடி ரூபாய்கள் செலவிட உத்தேசமிட்டுள்ளது. மேலும் கீழ்பவானி அணைக்கட்டுக்கு 30 லட்சமும், ராமபெருவாய்க்காலின் சீர்திருத்தத்திற்கு 20 லட்சமும் பெட்டலங்கா வாய்க்காலுக்கு 4 லட்சமும் காவேரி டெல்டா வாய்க்கால்கள் முன்னேற்றத்துக்கென 7 லட்ச ரூபாய்களும் சர்க்கார் ஒதுக்கியுள்ளது.

ராமபாத சாகர் அணைக்கட்டு

ராமபாத சாகர் அணைக்கட்டைப் பொறுத்த அளவில் சர்க்கார் 2 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது. மாகாணத்தில் கிடைக்கும் இருப்பைப் பயன் படுத்தவும் சர்க்கார் ஆவன செய்து வருகிறது.

ராயலசீமா

ராயலசீமாவின் முன்னேற்றத்துக்கெனத் திட்டங்கள் செய்வதை ஒரு அபிவிருத்தி கமிஷனர் பரிசீலனை செய்து வருகிறார்.

(எண்ணிக்கை ஆயிரங்களில்)

	1948-49 பட்ஜட் மதிப்பு
வருமானம்	50,32,31
செலவு	55,93,60
ரிசர்வ் நிதியிலிருந்து மாற்றம்	5,62,00

மேற்காட்டியபுள்ளி விவரத்திலிருந்து வருமானத்தில் 562 லட்ச ரூபாய் துண்டு விழுகிறது. இது ரெவினியு ரிசர்வ் நிதியிலிருந்து சரிக்கட்டிக்கொள்ளப்படும்.

என்று பேசிய கோபால ரெட்டி சென்னை கவர்னரையும் பாராட்டிப் பேசியதோடு இந்த பட்ஜட்டுக்குப் பின் அடுத்த பட்ஜட்டுக்கு இங்கு இருக்க மாட்டார் என்றுதான் நம்புவதாகக் கூறினார்.

நிதிமந்திரியின் பட்ஜட் பிரசங்கம் 64 பக்கங்களடங்கிய நூலாகவும் அச்சிடப்பட்டிருக்கிறது.

மேல் சபையில் பட்ஜட்

இன்று மேல் சபை பிற்பகலில் ராமகிருஷ்ணராஜா தலைமையில் கூடிய பொழுது நிதி மந்திரி கோபால ரெட்டி தனது வரவு செலவுத் திட்டத்தைப் படித்துச் சமர்ப்பித்தார்.

மலபார் போலீஸின் அட்டூழியங்கள்

குற்றச்சாட்டுகளை மறுத்து சர்க்கார் அறிக்கை

சென்னை, பிப். 24—

"வட மலபாரில், மலபார் ஸ்பெஷல் (விசேஷ) போலீசார் மிகுந்த அட்டூழியங்கள் செய்கின்றனரென்றும், இவர்களின் அடாத செயலுக்கு பலர் ஆளானார்களென்றும், இது விஷயமாக சர்க்கார் விசாரணை செய்ய வேண்டுமென்றும் தூது கோஷ்டியொன்று சர்க்காரைக் கண்டு விண்ணப்பத்தை சமர்ப்பித்தது."

இதுவிஷயமாக விசாரணை செய்து சர்க்கார் கீழ்க்கண்ட பத்திரிகை அறிக்கையை விடுத்துள்ளது. "விண்ணப்பத்திலிருந்த குற்றச்சாட்டுகள் உண்மையல்லவென்று தெரிய வருகிறது. அதில் கையெழுத்திட்டுள்ளவர்கள் அம்மாதிரியான அட்டூழியங்கள் நடைபெறவில்லை யென்றும் கூறியுள்ளனர். விண்ணப்பத்திலுள்ள விஷயங்களைத் தங்களுக்குப் படித்துக் காட்டவில்லையென்றும், தங்களது கைக்குறிகளை மாத்திரம் தனிக்காகிதங்களில் வைக்கச் சொன்னார்களென்றும் தெரிவித்தனர். மற்றும் சிலர் விசாரணைக்கு வந்து நடந்ததைக்கூறவே மறுத்துவிட்டனர்.

ஆகையினால் அறிக்கையில் கண்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையல்லவென்று சர்க்கார் கருதுவதாக அப்பத்திரிகையறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

பஸ்போக்குவரத்துத் தேசியத் திட்டம்

சர்க்காருக்கெனத் தனித் தொழிற்சாலை

சென்னை, பிப். 24—

சென்னை சர்க்காரின் பஸ்போக்குவரத்துத் தேசியத் திட்டத்திற்குத் தேவையான எல்லா பஸ்களுக்கும் தங்கள் சொந்தத்தொழிற்சாலையிலேயே 'பாடி' கட்டுவதெனத் தீர்மானித்துள்ளனர். இந்தத்தொழிற்பாலை, சில நாட்களுக்கு முன் சென்னை சர்க்கார் க்ரோம்பெட்டில் வாங்கியுள்ள இடப் பகுதியில் அமைக்கப்படும்.

பஸ்களுக்குப் 'பாடி' கட்டுவதற்காக, தனிப்பட்ட கம்பெனிகளோடு செய்யப்பட்டுள்ள தற்போதைய ஏற்பாடு வெற்றிதரக் கூடியதாயில்லாததால், சர்க்காரும் முயற்சியில் இறங்கியதாக, சாலைப் போக்குவரத்து போர்ட் செயலாளரும், பஸ் போக்குவரத்துத் திட்டத்திற்கு இப்போது பொறுப்பேற்றுள்ள அதிகாரியுமான தோழர் ஆர். பு. கபூர் தெரிவித்தார்.

பாகிஸ்தானில்:

வங்க மொழி, சர்க்கார் மொழியாக இராது

கராச்சி, பிப். 25—

பாகிஸ்தான் அரசியல் அமைப்பு சபையில், 40 நிமிட விவாதத்திற்குப் பிறகு ஆங்கிலம், உருது ஆகியவைகளோடு வங்க மொழியும் சர்க்கார் மொழியாக இருக்க வேண்டுமென்ற யோசனை நிராகரிக்கப் பட்டது.